திருச்சிராப்பள்ளி மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
(10.06.2015 முதல் 14.06.2015 வரை)
தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம்இ ஆடுதுறை – 612 101
போன் 0435 2472098 E-mail: dirtrri@tnau.ac.in - Fax: 0435 2472881

==========================================================================

தேதி 09.06.15

## கடந்த 4 நாளில் நிலவிய வானிலை (05.06.15-08.06.15)

| காரணிகள் | கடந்த வார வானிலை |
|---|---|
| மழை (மி.மீ) | 0 |
| அதிகபட்ச வெப்பநிலை(டி.செ) | 36-37 |
| குறைந்தபட்ச வெப்பநிலை(டி.செ) | 22-27 |
| மேக �munீட்டம் | 3-6 |
| ஈரப்பதம் (%) | 72-87 |
| காற்றின் வேகம் (கி.மீ.) | 6-11 |

## அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு

| காரணிகள் | எதிர்பார்க்கப்படும் வானிலை | | | | |
|---|---|---|---|---|---|
| | தேதி-1 10,06,15 | தேதி-2 11,06,15 | தேதி-3 12,06,15 | தேதி-4 13,06,15 | தேதி-5 14,06,15 |
| மழை (மி.மீ) | 0 | 0 | 8 | 3 | 0 |
| அதிகபட்ச வெப்பநிலை(டி.செ) | 37 | 34 | 34 | 34 | 37 |
| குறைந்தபட்ச வெப்பநிலை(டி.செ) | 27 | 28 | 27 | 27 | 27 |
| மேக மூட்டம் | 7 | 8 | 8 | 7 | 7 |
| ஈரப்பதம் (%) | 35-59 | 36-61 | 40-58 | 35-57 | 33-59 |
| காற்றின் வேகம் (கி.மீ,மணிக்கு) | 13 | 14 | 13 | 16 | 18 |
| காற்றின் திசை | தென்மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு | மேற்கு |

- 10.06.15 முதல் 14.06.15 வரை வானம் மேகமூட்டத்துடன் இருள்சூழ்ந்து காணப்படும். எதிர்பார்க்கப்படும் மழை அளவு 3-8 மி.மீ.

### வேளாண் அறிவுரைகள்

### முக்கிய பயிர்கள் நெல்இ கரும்பு வாழை மற்றும் பருத்தி

### நெல்தரிசு பருத்தி முதிர்ச்சி மற்றும் அறுவடை பருவம் ? எள் முதிர்ச்சி மற்றும் அறுவடை பருவம் நெல் நாற்றங்கால் தயார்செய்தல்

- குறுவை பருவத்திற்கு ஏற்ற நெல் இரகங்களான ஆடுதுறை 36 ? ஆடுதுறை 43 ? ஆடுதுறை 45 மற்றும் கோ 51 விதைகளை விதைப்பு செய்வதற்கு முன்பு விதை நேர்த்தி செய்வது அவசியம். நெல் விதைகளை கார்பென்டாசிம் மருந்து 1 கிலோ விதைக்கு 2 கிராம் அல்லது சூடோமோனாஸ் பாக்டீரியா 10 கிராம் என்ற அளவில் கலந்து ஈர விதை நேர்த்தி செய்து விதைக்க வேண்டும். இதனால் விதைகள் மூலம் பரவக் கூடிய நோய்களை கட்டுப்படுத்த முடியும்.
- குறுவை பருவத்திற்கு நாற்றங்கால் தயார் செய்யும் போது ஒரு எக்டருக்கான 20 சென்ட் நாற்றங்காலில் ஒரு டன் தொழு உரம் அல்லது கம்போஸ்ட் இடவேண்டும். கடைசி உழவின் போது நாற்றங்காலுக்கு 40 கிலோ டிஏபி உரம் அடியுரமாக இடவேண்டும். களிமண் நிலத்திற்கு 4 கிலோ ஜிப்சமும் ? ஒரு கிலோ டி.ஏ.பி. ஒரு சென்ட் நாற்றங்காலுக்கு என்ற அளவில் விதைத்த 10 ஆம் நாள் இடவேண்டும். இது வேர் அறுபடாமல் நாற்றுக்களை பறிக்க உதவும்.
- சாகுபடி செய்யப்பட்டுள்ள கோடை நெற்பயிரில் குலை நோய்த் தாக்குதல் பரவலாக தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த டிரைசைக்ளோசோல் 200 கிராம் , ஏக்கர் அல்லது கார்பென்டெசிம் 200 கிராம் , ஏக்கர் என்ற அளவில் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.
- தற்பொழுது நிலவும் வானிலையின் காரணமாக கோடை நெற்பயிரில் இலையுறை கருகல் நோய் பரவலாக தென்படுகிறது இதனைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு கார்பன்டெசிம் 200 கிராம் அல்லது புரோப்பிகோனோசோல் 200 மி.லி. மருந்தை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.
- பருத்தியில் மாவுபூச்சி தாக்குதல் தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த புரோபினோபாஸ் 400 மி.லி. ரூ அசாடிராக்டின் 10000 பி.பி.எம். 200 மி.லி. , ஏக்கர் என்ற அளவில் தெளித்து கட்டுப்படுத்தலாம்.

ஒம்,- வெ. இரவி.
இயக்குநர்

,உண்மை நகல், பேராசிரியர்(உழவியல்)